(இ) நீர்வீழ்ச்சியின் மூலமாக உற்பத்தியாகும் மின்சாரம் 1 யூனிட்டின் அடக்க விலை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : (அ) யூனிட்டுக்கு 12·3 காசு.

(இ) யூனிட்டுக்கு 2·6 காசு.

Confidential report of N.G.G.Os.

* 491 *Q.*—DR. H.V. HANDE
THIRU N. S. V. CHITHAN :
THIRU K. VINAYAKAM :
THIRU S. ALAGIRISAMY } Will the Hon. the Chief Minister be pleased to state.—

(*a*) whether it is proposed to discontinue or change the system of maintaining confidential reports of N.G.G.Os. ; and

(*b*) if so, the detials thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) and (இ) அரசுப் பணியாளர் சங்கங்கள் நிறைவேற்றிய தீர்மானங்களிலும் பத்திரிக்கைகளில் வெளியான கடிதங்களிலும் கட்டுரைகளிலும் இது குறித்துச் சில கருத்துரைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இவற்றை அரசாங்கம் நாட்டத்தில் கொண்டுள்ளது. தேவையென்று கருதும் அளவிற்கு இம்முறையைச் சீர்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், இந்தத் தலைமை அதிகாரிகள் மற்றும் பெரிய பெரிய உயர்ந்த அதிகாரிகள், சிறிய அதிகாரிகளோ அல்லது என். ஜி. ஒக்களோ அவர்கள் செய்யும் பணி சரியாக இல்லை என்றாலோ, அல்லது அவர்கள் மீது குற்றங்குறைகள் இருந்தாலோ, இந்த இரகசியக் குறிப்பில் எழுதப்பட்டு மீண்டும் அந்த அதிகாரிக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்று முறையிருந்தாலும் கூட, பல்வேறு இலாக்காக்களிலே இது சரியான முறையில் கையாளாமல் கடைபிடிக்காமல் இருக்கிறார்கள். அப்படியிருப்பதால் நிரம்ப அதிகாரிகள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்று அரசாங்கம் உணருகிறதா ? அப்படியிருந்தால் அப்படி உணருகிறார்கள் என்றால், உடனடியாக இதற்குத் திட்டவட்டமான உத்தரவு போட்டு இப்படிப்பட்ட இரகசியக் குறிப்பு தேவையில்லை என்று ஒரு உத்தரவைப் போடத் தயாராக இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இரகசியக் குறிப்பு தேவையில்லை என்று அரசாங்கம் உத்தரவு போடுவதற்குத் தயாராக இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதிகாரிகள் மீது எழுதப்படுகின்ற குறைகள் உடனடியாக அவருக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அப்படித் தெரிவிக்கப்படுகிறது என்பதற்கு முறையிருந்தாலும் அப்படித் தெரிவிக்கப்படுகிற முறை நடப்பில் இல்லை என்று சொன்னார்கள். அந்த முறையில் தெரிவிக்கப்படாமல் இருந்தால் அது உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டுமென்றும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. கே. விநாயகம் : நமது அரசில் உத்தியோகம் செய்கிற அதிகாரிகளைப்பற்றி இப்பேர்ப்பட்ட இரகசியக் குறிப்பு தேவையற்றது என்று இன்றைய தலைமைச் செயலக சீஃப் செக்ரடரி, உயர்ந்த அலுவலர் இதுமாதிரி ஒரு கருத்தை ஒரு மாநாட்டில் வெளிப்படுத்தி இருக்கிறார்களா ? அப்படி அவர் வெளிப்படுத்தியிருந்தால் அது ஆட்சியின் அனுமதியைப் பெற்று அல்லது தனிப்பட்டவருடைய கருத்தா ? இதைப்பற்றி ஆட்சி யோசித்து இருக்கிறதா ? இதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியில் இப்படிப்பட்ட கோரிக்கை வெளியிடப்பட்டபொழுது, அது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்றுதான் தலைமைச் செயலாளர் குறிப்பிட்டிருப்பதாக நான் அறிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த இரகசியக் குறிப்பு எழுதுவதன் மூலமாகச் சில தவறான நடவடிக்கைகளுக்கு, பெரிய அதிகாரிகளுக்கு உடந்தையாக இல்லை என்பதற்காக, எவ்வளவு நேர்மையானவராக இருந்தாலும்கூட இரகசியக் குறிப்பு எழுதுவதன் மூலமாகப் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, நமது அரசு கட்டாயமாக, அவர்களைப் பாதிக்காத முறையில் அதை எடுத்துவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படித் தவறாக இருந்தால் மேல் அதிகாரிக்களுக்கு அப்பீல் செய்து கொள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமை இருக்கிறது.

Safety of Tamil population in Bombay.

*** 492 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Thiru M. P. SARATHI : Will the Hon. the Chief Minister be pleased to state whether he has written to the Chief Minister of Maharashtra about the safety of Tamil population in Bombay, about the 17th February 1969 ?**

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : ஆம்.

திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் : சபாநாயகர வர்களே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சொத்துக்கள் எவ்வளவு நஷ்டமாகிவிட்டன ? அதைத் திருப்பிக் கொடுப்பதற்கு மகாராஷ்டிர அரசாங்கத்திற்குத் தகவல் அளிக்கப்பட்டதா ? அவர்களின் பாதுகாப்பிற்கு மேலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மராட்டியத்தில் இந்த சிவசேனைகளின் காரணமாக மொத்தமாக ஏற்பட்ட விரயம் 4 முதல் 5 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இதிலே தனிப்பட்ட முறையிலே தமிழர்கள் இல்லங்கள், அவர்களுடைய உடமைகளுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்பதற்கான விவரம் எதுவுமில்லை. அதற்கு நஷ்டஈடு தரும் முறையில் மகாராஷ்டிர அரசாங்கம் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழர்கள் பம்பாயிலிருந்தும், இலங்கையிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்டது போலவே இன்று மராட்டியத்திலிருந்தும், மற்ற வடமாநிலங்களிலிருந்தும் விரட்டியடிக்கப்படுகிறார்கள். இந்திய ஒருமைப்பாடு என்னும் பெயரால் "ஜன கண மண" பாடுவதற்கு மட்டும் தானா தமிழர்கள் இருக்கிறார்கள். தமிழர்கள் இனி தமிழ்நாட்டில் மட்டும்தான் வாழ முடியும் என்ற நிலை உருவாவது அரசுக்குத் தெறியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் மராட்டிய முதல்வருக்கு எழுதிய கடிதத்திற்கு அவர் பதில் எழுதும்போது, தற்பொழுது முற்றிலும் இயல்பான நிலை நீடிக்கிறது என்றும், அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்க காவலர் தங்களால் இயன்றதை எல்லாம் செய்து வருகின்றனர் என்றும் மராட்டிய முதலமைச்சர் பதில் அளித்திருக்கிறார். ஆகவே, தமிழர்களுக்கு இனி அங்கு தொடர்ந்து பாதுகாப்பு அளிக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.